[1978 செப்டம்பர் 14

இந்த கன்டின்ஜன்ட் ஊழியர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் எந்தக் காரியமும் செய்யப்படுவதில்லை.

தற்போது தற்காலிகப் பதவி நீக்கத்தில் 10 நபர்கள் உள்ளனர். இந்த பத்து நபர்களில் 2 நபர்கள் வேலைக்கு அவர்களாகவே வரவில்லை. மீதம் 8 நபர்கள் திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபட்டிருந்ததால் அவர்களைத் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. விசாரணையை ஒரு மாத காலத்திற்குள் முடித்து முடிவான உத்தரவினை பிறப்பிக்கச் செயல் அலுவலரைக் கோரப்பட்டுள்ளது. தற்போது யாரையும் இடமாற்றம் செய்வதும் நிறுத்தப்பட்டு விட்டது.

ஸ்பெஷல் டியூட்டி அலவன்ஸ், மண்டைக்காடு திருவிழாவின்போதும் மற்றும் நவராத்திரி விழாவின் போது சுவாமி திருவனந்தபுரம் செல்லும் போது மட்டும் வழங்கப்படுகிறது. இந்த அலவன்ஸ் எவ்வித பாக்கியும் இன்றி பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது.

ஆகையால், கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம் கேட்டுக் கொண்டபடி, மேற்கூறிய ஊழியர்களை அரசு கடை நிலை ஊழியர்களாக மாற்றவோ, அல்லது அரசு கடை நிலை ஊழியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளையும் வழங்கவோ, இவ்வாலயங்களின் நிதி நிலைமை, மற்றும் ஏற்படக்கூடிய நிர்வாகச் சிக்கல் காரணமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஏனைய இரண்டு கோரிக்கைகள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.

இணைப்பு III

[409 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கரூர் ஊராட்சி ஒன்றியம் இனும் கரூர் ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வெங்கமேடு கிராமத்தில் ஒரு இளநிலைப் பள்ளி ஒன்றினை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியைச் சார்ந்த வகுப்புகள் குளத்துப் பாளையம் சாலையின் வடபறமும் தென்புறமுமாக இயங்கி வருகின்றன. வடபுறத்திலுள்ள மூன்று கட்டிடங்களில் இரண்டு கட்டிடங்கள் சிமெண்டு ஓடுகள் கொண்ட கூரை போட்ட நல்ல கட்டிடங்களாகும். மற்ற ஒரு கட்டிடம் தற்காலிக கட்டிடம், ரூபாய் 3,000 மதிப்பீட்டில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கரூர் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து பள்ளியில் படிக்கும் மாணவர்களின் இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு கட்டப்பட்டதாகும். இந்த தற்காலிக கட்டிடம் 15 மீட்டர்கள் X

1978 செப்டம்பர் 14]

3.40 மீட்டர்கள் மற்றும் சிமெண்டு கலவையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 16 தூண்களுடன் கட்டப்பட்டு, மேற்கூரை ஓலைகளால் வேயப்பட்டதாகும். இந்தக் கட்டிடத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் தடுப்பு சுவர்கள் எதுவும் கிடையாது. ஆனால் வடபுறமும், தென்புறமும் தென்னை ஓலைகளால் வேய்ந்த தடுப்புச் சுவர்கள் கட்டப் பட்டுள்ளன. மற்றும் இந்த தற்காலிக கட்டிடத்தில் 322 மாணவ மாணவிகளைக் கொண்ட 6 இளநிலை பள்ளி வகுப்புகள் இயங்கி வந்துள்ளன.

2. 11. 8. 1978 அன்று மாலையில், இந்த தற்காலிக கட்டிடத்தில் உள்ள 6 வகுப்புகளிலும் 279 மாணவ மாணவிகள் ஆஜராகி இருந்தனர். இவர்களுக்கு 4 ஆசிரியர்கள் அச்சமயத்தில் பாடம் கற்பித்து வந்துள்ளனர். அன்று மதிய இடைவேளைக்குப் பிறகு சுமார் மாலை 2.45 மணிக்கு மிக வேகமான சூறாவளிக்காற்று ஒன்று அங்கு வீசியது. இந்த காற்றின் வேகத்தை தாளமுடியாமல், தற்காலிக கட்டிடத்தின் கூரை, 16 தூண்களுடன் எதிர்பாராத விதமாக கீழே சரிந்து விழுந்துவிட்டது, இந்த எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தினால் 35 பேர்களுக்கு காயங்கள் ஏற்பட்டதோடு, 3 பெண்பிள்ளைகள் அந்த இடத்திலேயே இறந்துவிட்டனர், மற்றவர்கள் காயங்கள் எதுவுமின்றி தப்பி வெளியில் வந்துவிட்டனர்.

3. இந்த விபத்து ஏற்பட்ட செய்தியை அறிந்தவுடன் அந்த ஊரில் இருந்த மற்ற அதிகாரிகள், தீ அணைப்பு படையினரின் உதவியுடன் காயமுற்ற எல்லோரையும் உடனடியாக தலைமை மருத்துவ மனையில் சேர்த்தனர். விபத்தில் இறந்த மூன்று மாணவிகளின் சடலங்களையும் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று, மரணப் பரிசோதனைக்குப் பிறகு சடலங்களை பெற்றோர் களிடம் ஒப்படைத்தனர். காயமுற்ற 35 பேர்களில் 13பேர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதால், அவர்களுக்கு சிகிச்சை அளித்து வீட்டுக்கு அன்றே அனுப்பிவிட்டனர். மீதமுள்ள 22 பேர்களுக்கு காயங்களை குணப்படுத்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்து வருகின்றனர். திருச்சிராப் பள்ளி மாவட்ட மருத்துவ அதிகாரி மருத்துவமனைக்கு உடனடியாக வந்து காயமுற்றோரை பரிசோதித்தார். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த பிள்ளைகளில், ஒரு பிள்ளைக்கு தண்டுவடத்தில் காயமேற்பட்டிருந்ததால், அப்பிள்ளையை மதுரை நகரில் உள்ள தலைமை மருத்துமனையில் சேர்த்து நரம்பியல் மருத்துவ நிபுணரின் மேற்பார்வையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் 11-8-78 அன்று சம்பவம் நடந்த அன்றே இடத்தை பார்வையிட்டு காயமுற்றோருக்கு தகுந்த சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்தார். மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை கோட்டப் பொறியாளரிடம் இந்த விபதது நடந்த காரணத்தை கண்டறிந்து

ஒரு அறிக்கையை அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் 12. 8. 78 அன்று சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு, இறந்த பிள்ளைகளின் பெற்றோருக்கு தலா ரூபாய் 2,000/- வீதம் கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவிற்கிணங்க ரூபாய் 2,000/- ஒவ்வொரு இறந்த குழந்தையின் பெற்றோருக்கும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

4. இந்த தற்காலிக பள்ளிக் கட்டிடம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கட்டப்பட்டிருந்தாலும், இக்கட்டிடம் 11.8.78 அன்று அடித்த சூருவளிக் காற்றின் வேகத்தை தாங்கமுடியாமல் விழுந்துவிட்டது. இந்த விபத்து தற்செயலாக ஏற்பட்டதேயன்றி வேறு எந்தவித தவருன காரணங்களினுலும் ஏற்பட்டதல்ல. இந்த விபத்தின் காரணத்தைகண்டறிய சென்னையில்உள்ள நெடுஞ்சாலை ஆராய்வு கழகத்திலிருந்து, ஒரு அதிகாரியை சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி, அக்கட்டிடத்தின் வலிவுத் தன்மையை கண்டறிந்து அரசுக்கு ஒரு அறிக்கை கொடுக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் காயமுற்ற மற்ற 22 பேர்களுக்கும் சிறு உதவித் தொகை அளிக்கும் பொருட்டு, ஒரு கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு IV

[477 ஆம் பக்கத்தில் இனம் 11 க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 31 of 1978.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 14th August 1978.